# *புனித குளோத்தில்டா (474-549)*

இவள் பர்கண்டியா நாட்டின் மன்னருடைய மகள். இவள் கிறிஸ்தவள். அவிசுவாசியான ஓர் அரசனை மணந்தாள். அவரது பெயர் குளோவிஸ். இவர் 469ஆம் ஆண்டு கிறிஸ்தவராகி ரீம்ஸ் நகரின் ஆயரான புனித ரெமிஜியுஸ் கையால் ஞானஸ்நானம் பெற்றார்.

511-ஆம் ஆண்டில் அரசர் இறந்தார். அதன்பின் 24 ஆண்டுகள் வாழ்ந்தாள். ஏழைகளுக்கு உதவி செய்து புண்ணியங்களை சிறந்த விதமாக அனுசரித்து வந்தாள். இவளுடைய ஆண்மக்கள் சகல அக்கிரமங்களையும் செய்து நாட்டில் சண்டைகள் நடத்தினர். இதையெல்லாம் கண்ட அவள் வருந்தினாள். தூர்ஸ் நகருக்குப் போய் புனித மார்ட்டின் என்பவரது கல்லறை அருகில் செபித்து நாட்டைக் காக்கும்படி மன்றாடினாள்.

**சிந்தனை:**

நாட்டில் உபதிரவங்கள் ஏற்படும் பொழுது நாம் உண்மையான அனுதாபம் கொண்டு நாட்டின் பாவ அக்கிரமங்களுக்காக பரிகாரம் செய்ய வேண்டும். இரக்கமும் பொறுத்தலும் கேட்டு கடவுளை மன்றாட வேண்டும்.

**செபம்:**

யெருசலேமைப் பார்த்து கண்ணீர் வடித்த இயேசுவை, நாட்டின் பாவ அக்கிரமங்களைக் கவனியாமல் எங்கள் நாட்டைக் காப்பாற்றும்.